மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் இல்லை. ஆனாலும் அந்தமானிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே சென்று அந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் ஈடுபட்டார் என்ற செய்தியை நான் பத்திரிகையில் பார்த்ததுதான்.

திருப்பூர் ஒன்றியத்தின் கீழுள்ள மருந்தகங்கள்

* 804-வினு—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட எந்தெந்த மருந்தகங்களை அரசு 1973–74 ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நடப்பு ஆண்டில் ஒன்றும் எடுக்கப்படவில்லை.

Co-operative Rural Dispensaries

* 805 *Q*.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open Co-operative Rural Dispensaries in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மருத்துவப் பட்டதாரிகளுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும், மருத்துவப் பராமரிப்புப் பணிகளில் பொது மக்களும் பங்கு கொள்ள வகை செய்யவும், அரசு, 1973–74-ஆம் ஆண்டில், இந்திய அரசின் ஐந்து லட்சம் பேர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 13 கிராமப்புற கூட்டுறவு மருந்தகங்கள் திறக்கக் கருதியுள்ளது. முன்னோடித் திட்டமாக இந்த மருந்தகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி

1974 ஏப்ரல் 10]

ஒன்றியங்களில் திறக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 65 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மருத்துவ அதிகாரி, துணை மருத்துவப் பணியாளர்கள், பொது மக்கள் ஆகியோர் இம்மருந்தகங்கள் நடத்துவதற்காகத் தங்களுக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். 25 சதவீதச் செலவு, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து பங்குத் தொகையாக வசூலிக்கப்பட வேண்டும். எஞ்சிய 75 சதவீதத்தில் 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் மத்திய அரசு உதவியாக கிடைக்கும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்த மருந்தகங்கள் எப்போது ஆரம்பிப்பதாக அரசு உத்தேசித்துள்ளது. நாள் அதிகம் கடத்தாமல் கூடிய விரைவில், அதை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் திட்டம வேலை அற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது என்ற பெயரால் மக்களுடைய கூட்டுறவு அடிப்படையில் சந்தா செலுத்துகிற முறையில் உருவாகிற மருத்துவமனை திட்டமாகும். இந்தத் திட்டத்தில் கிராமத்தில் உள்ளவர்கள், ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவர்கள் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்டு அங்கேயுள்ளோரும், ஒரு டாக்டரும், சில துணை மருத்துவப் பணியாளர்களும் சேர்ந்து, கூட்டுறவு முறையில் அமைத்தால் உடனே செயல்படுத்தலாம். அதற்கு டாக்டர் முன் வரவேண்டும். நாம் நியமிக்கிற டாக்டர் அல்ல. டாக்டர் தானகவே முன் வந்து, அவருக்குத் துணையாக வரும் பார்மசிஸ்ட், ஆக்சிலரி நர்ஸ், மேல் நர்சிங் ஆர்டர்லி, ஸ்வீப்பர் இவர்களெல்லாம் அவர்களுக்கு உரிய ஊதியத்தை எடுத்துக்கொண்டு, அந்த சங்கத்திற்கு உறுப்பினர் சந்தா செலுத்தி அதற்கு மேல் மத்திய அரசு தரும் உதவித் தொகையும் வைத்துச் செயல்படுத்த வேண்டும். இது ஒரு விதமான கூட்டுறவு இயக்கம். தொழிலாளர் நலத் துறையால் உருவாக்கப் பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்கள் ஆர்வத்தோடு முன்வந்து நிறைவேற்ற முயற்சித்தால் வெற்றி காணலாம் என்று நினைக்கிறேன்.